# 6

# "இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்"

## (3:1-14)

*எபிரெயர் 3:1ம் வசனம் "இப்படியிருக்க" என்று தொடங்குகிறது, இது முந்தின வசனப்பகுதிகளைக் குறிப்பிடுகிறது.[1] "இப்படியிருக்க (கூறப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில்), ... இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்" (வசனம் 1). இந்த நிருபத்தைத் தொடக்கத்தில் பெற்றுக்கொண்டவர்கள் உணர்ந்தறிந்தார்களோ இல்லையோ, அவர்கள் இயேசுவைத் தூற்றிக் கொண்டிருந்தனர். அவர்கள் பிரமாணத்தை நோக்கிப் பின் சென்றிருந்தால், அவர்கள் மோசேயினிடத்திற்குத் திரும்பியிருந்தால், அவர்கள் விழுந்து போயிருந்தால் - இப்படிப்பட்ட செயல் எதுவும் இயேசுவுக்கு மரியாதைக் குறைவைக் சுட்டிக்காண்பிப்பதாக இருக்கும்.*

*ஆகையால் அவர்கள் பின்வருவதைச் செய்வது அவசியம் என்று எழுத்தாளர் கூறினார்: "இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்." "கவனித்துப் பாருங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை, "தெளிவாக உணர்ந்தறிய ... முழுமை யாகப் புரிந்துகொள்ள, நெருக்கமாக அல்லது விருப்ப நோக்குடன் கவனிக்க" என்று அர்த்தப்படுகிறது.[2] அதைச் செய்வது அவர்கள் அவருக்கு விசுவாசத்துடன் நிலைத்திருக்கும்படி அவர்களை ஊக்குவிக்கும். இயேசுவைக் கவனித்துப் பார்த்தல் என்பது அவருக்கு விசுவாசத்துடன் நிலைத்திருக்க நமக்கும் உதவும்.*

## உண்மையுள்ளவரான இயேசுவைக் கவனித்துப் பாருங்கள் (3:1-6அ)

*நமது வசனப் பகுதியிலும் எபிரெயருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும், கர்த்தரின் உண்மைத் தன்மை என்பது ஒரு திறவுகோல் சிந்தனையாக உள்ளது (கவனிக்கவும் வசனங்கள் 2, 6). இயேசுவின் உண்மைத்தன்மை பற்றிய பல விவரிப்புகள் நமது வசனப் பகுதியில் காணப்படுகின்றன.*

### நம்மைச் சகோதரர் என்று அழைப்பதில் உண்மைத்தன்மை (3:1அ)

*முந்திய அதிகாரத்தில் நாம், இயேசு "அவர்களை (பரிசுத்தமாக்கப் பட்டவர்களை) சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்" என்று குறிப்பிட்டோம் (2:11; காண்க வசனம் 17). இந்த அதிகாரம், "இப்படியிருக்க ... பரிசுத்த* சகோதரரே*" என்று தொடங்குகிறது (3:1அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசுவின் சகோதரராக[3] இருப்பதில் நாம், "பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாக" இருக்கிறோம் (வசனம் 1ஆ) - இது*

வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களுக்கான பூமிக்குரிய அழைப்பிற்கு எதிரானதாக இருந்தது.

### அப்போஸ்தலர் மற்றும் ஆசாரியர் என்ற வகையில் உண்மைத்தன்மை (3:1இ, 2அ)

இயேசு, "நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிறவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளார். "அப்போஸ்தலர்" என்ற வார்த்தை, "அனுப்பப்பட்ட ஒருவர்" என்று அர்த்தப்படுகிறது. இயேசு, தேவனால் மனிதருக்கு அனுப்பப்பட்டார் (காண்க மத்தேயு 10:40; மாற்கு 9:37; யோவான் 5:36); *தேவனிடத்தில் இருந்து மனிதகுலத்தினிடத்திற்குச்* செல்லுதல் என்பது இயேசுவின் ஊழியத்தினுடைய ஒரு பகுதியாக இருந்தது. இருப்பினும் அவர் நமது பிரதான ஆசாரியராகவும் ஆனார். பிரமாணத்தின்கீழ், மக்கள் தேவனை அடையும்படி, பிரதான ஆசாரியர் ஒருவர் மக்களுக்காக பரிந்து பேசினார். ஆகையால், செயல்விளைவில் *மனிதகுலத்தினிடத்தில் இருந்து தேவனிடத்திற்குச்* செல்லுதல் என்பது இயேசுவின் ஊழியத்தின் இன்னொருபகுதியாக இருந்தது (காண்க 1 தீமோத்தேயு 2:5). G. C. புரூவெர் அவர்கள் இந்த இரண்டு பணிப்பொறுப்புகளையும் பின்வருமாறு விளக்கினார்: "தேவனுக்காக மக்களிடத்தில் பேசுபவர் ஒரு தீர்க்கதரிசி. மக்களுக்காகத் தேவனிடத்தில் பேசுபவர் ஒரு ஆசாரியர்."[4]

அப்போஸ்தலர் மற்றும் பிரதான ஆசாரியர் என்ற இயேசுவின் இரண்டு பணிப்பொறுப்புகளிலும், அவர் "தம்மை ஏற்படுத்தினவருக்கு *உண்மையுள்ளவராயிருக்கிறார்*" (வசனம் 2அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தாம் செய்யும்படி தேவன் அனுப்பிய யாவற்றையும் நிறைவேற்றுவதில் அவர் உண்மையுள்ளவராயிருந்தார் (காண்க யோவான் 4:34; 5:30; 6:38).

### தேவனுடைய வீட்டைக் கட்டுபவர் மற்றும் எஜமானர் என்ற வகையில் உண்மைத்தன்மை (3:2ஆ-6அ)

பூமியில் இயேசுவின் ஊழியம் பல்வேறு வகைகளில் விளக்கப்படுத்தப்பட முடியும் (காண்க லூக்கா 4:43; 19:10). நமது வசனப்பகுதியில், தேவனுடைய வீட்டைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல் என்ற அவரது ஊழியத்தின் மீது வலியுறுத்தம் உள்ளது (வசனங்கள் 3, 4, 6).

இயேசு "மகாபெரியவர்களைக் காட்டிலும் பெரியவராக" இருக்கிறார் - அதாவது, அவர் மோசேயைக் காட்டிலும் பெரியவராக இருக்கிறார் - என்பதை நிலைநாட்டுவதற்கு, இயேசுவின் உண்மைத் தன்மையினுடைய இந்தக் கூற்றை எழுத்தாளர் பயன்படுத்தினார். யூதத்துவ மனங்களில், மோசேயைக் காட்டிலும் பெரியவர் யாரும் இருந்ததில்லை. யூதர்கள், மோசேயை தூதர்களைக் காட்டிலும் பெரியவர் என்று கருதினர். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் தமது விவாதத்தில், தர்க்க ரீதியான அடுத்த அடிவைப்பை எடுத்தார்: அவர் ஏற்கனவே, தூதர்களைக் காட்டிலும் இயேசு பெரியவராக இருந்தார் என்பதை நிரூபித்திருந்தார்; அவர் தொடர்ந்து, தூதர்களைக் காட்டிலும் பெரியவர் என்று யூதர்கள் யாரை நினைத்தனரோ, அவரைக் காட்டிலும் இயேசு பெரியவராக இருந்தார் என்று நிரூபிக்கச் சென்றார்.[5]

எழுத்தாளர், இயேசு மற்றும் மோசே ஆகியோருக்கு இடையில் இரண்டு

நேர்மாறான ஒப்பீடுகளைத் தரவழைத்தார்:

- இயேசு கட்டுபவராக இருக்கிறார்; மோசே கட்டிடத்தின் ஒரு பாகமாக இருந்தார் (வசனங்கள் 3, 4).
- இயேசு குமாரனாக இருக்கிறார்; மோசே ஊழியக்காரராக இருந்தார் (வசனங்கள் 5, 6).

### நம்மைத் தமக்குச் சொந்தமானவர்கள் என்று ஒப்புக்கொள்வதில் உண்மைத்தன்மை (3:6அ)

6ம் வசனம், "கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; ... *நாமே அவருடைய வீடாயிருப்போம்*" என்று கூறுகிறது (வசனம் 6அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மத்தேயு 16ல் இயேசு, தமது சபையைத் தாம் கட்டவிருப்பதாகக் கூறினார் (வசனம் 18), மற்றும் 1 தீமோத்தேயு 3:15ம் வசனம், சபையே தேவனுடைய வீட்டாராக உள்ளனர் என்று அறிவிக்கிறது. இன்றைய நாட்களில் யூதர்கள் அல்ல, ஆனால் கிறிஸ்தவர்களே தேவனுடைய வீடாக உள்ளனர். நாம் அவருக்கு உரியவர்களாக இருக்கிறோம். நாம் அவர் வாசம் பண்ணும் இடமாக இருக்கிறோம் (எபேசியர் 2:21, 22). என்ன ஒரு சிலாக்கியம்! என்ன ஒரு கனம்!

## இயேசுவைக் கவனித்துப் பாருங்கள், மற்றும் உண்மையுள்ளவர்களாயிருங்கள் (3:6ஆ-14)

எழுத்தாளர் எப்போதுமே நடைமுறையுள்ளவராக இருந்தார். அவர், இயேசுவின் உண்மைத் தன்மை பற்றிய தமது கலந்துரையாடலைத் தொடர்ந்து, தமது வாசகர்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி ஒரு புத்திமதியை அளித்தார்.

### தேவனுடைய வீடாக (மக்களாக) இருத்தல் மாத்திரம் போதுமானதல்ல

6மற்றும் மீண்டும் 14 ஆகிய வசனங்களில் உள்ள "ஆகில்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய மக்களாக இருந்தனர், ஆனால் அவர்கள் "உறுதியாகப் பற்றிக்*கொண்டிருக்கவில்லை.*" 7 முதல் 11 வரையுள்ள வசனங்களில் எழுத்தாளர், சங்கீதம் 95ல் இருந்து மேற்கோள் காண்பித்து, இஸ்ரவேல் மக்களின் உண்மையற்ற தன்மையைப் பற்றிப் பேசினார். துரதிர்ஷ்டவசமாக, மாபெரும் தலைவர்கள் வெற்றியை உத்தரவாதப் படுத்துவது இல்லை. மோசே ஒரு மாபெரும் தலைவராக இருந்தார்; இன்றைய நாட்களில் இயேசு இன்னும் பெரியவராக இருக்கிறார். இருப்பினும், பெரிய *பின்பற்றாளர்களும்* இருக்க வேண்டும்.

### நாம் எவ்வாறு "உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்க" முடியும்

நாம் உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்பதற்கு உதவக்கூடிய பல ஆலோசனைகளை நமது வசனப் பகுதி தருகிறது.

(1) *நாம் விழுந்துபோகக் கூடும் என்பதை உணர்ந்தறியுங்கள்.* "ஆகில்" (வசனங்கள் 6, 14) என்ற வார்த்தை நிபந்தனை விதிப்பதாக உள்ளது. இஸ்ரவேல் மக்கள் விழுந்து போனார்கள் என்றால், நாமும் விழுந்து போகக் கூடும். எனவே

இது நடைபெறாதிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

*(2) நம்பிக்கையைப் பற்றிக்கொண்டிருங்கள்* (வசனம் *6*). “நம்பிக்கை” என்பது எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் திறவுகோல் வார்த்தையாக உள்ளது (*6:11, 18, 19; 7:19; 10:23*). நாம் அன்றாடம் வாழ்வதற்கு நம்பிக்கை நமக்குத் தேவைப்படுகிறது.

*(3) “முடிவு பரியந்தம்” உண்மையுள்ளவர்களாக இருக்க பிரயாசப்படுங்கள்* (வசனங்கள் *6, 14*).

*(4) நமது இருதயங்கள் கடினப்பட்டுப் போவதை அனுமதிப்பதற்கு எதிராக விழிப்புடன் இருங்கள்* (வசனங்கள் *8, 13*). *பாவம்* என்பது *கடினப்பட்ட இருதயத்தை* உண்டாக்குகிறது, இது *அவிசுவாசத்தை* விளைவிக்கிறது, இது *விசுவாச விலக்கத்திற்குக்* காரணமாகிறது.




*(5) ஆவிக்குரிய வகையில் விழிப்புடன் இருங்கள்* (“எச்சரிக்கையாயிருங்கள்,” வசனம் *12*).

*(6) உண்மையாயிருக்கும்படியும் சரியானவற்றைச் செய்யும்படியும் ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுங்கள்* (வசனம் 13). இது எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் உள்ள “ஒருவருக்கொருவர்” வசனப் பகுதிகளில் ஒன்றாக உள்ளது (காண்க *10:24, 25*).

*(7) “இன்றைய தினம்” என்பது மாத்திரமே நாம் கொண்டுள்ள காலமாக உள்ளது என்பதை உணர்ந்தறியுங்கள்* (வசனங்கள் *7, 13*). நீங்கள் செய்யத் தேவையான எதையும் இப்போதே செய்யுங்கள். அதைத் தள்ளிப்போடாதீர்கள்!

## போதகருக்குக் குறிப்புகள்

*3:7*ல் நாம், எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் இரண்டாவது புத்திமதி கூறுதல் பகுதியின் தொடக்கத்தைக் காணுகிறோம் (இப்புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் வரைகுறிப்பைப் பார்க்கவும்) இந்தப் புத்திமதிப் பகுதியை நாம், “கடந்த காலத்தில் இருந்து ஒரு எச்சரிக்கை” என்ற பாடத்தில் முழுமையாகக் காண்போம். அதன் முதல் பகுதியானது பாடத்தை நடைமுறைக்குரியதாகச்

*செய்வதற்கு இந்த எடுத்துரைப்பில் சுருக்கமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் இந்தப் பாடத்தைப் போதிக்கையில், நீங்கள் 3:7-14ஐத் திரும்பவும், 4ம் அதிகாரத்தின் தொடக்கத்துடன் எடுத்துரைப்பீர்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.*

---

குறிப்புகள்

[1]*முந்திய பாடங்களை, விசேஷமாக இயேசுவைப் பற்றி வசனப்பகுதி கூறுவது என்ன என்பதை மறுகண்ணோட்டம் இடுங்கள்.* [2]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 123. [3]*வழக்கம்போலவே, "சகோதரர்" என்பது இங்கு ஒரு பொதுப்பாலில் பயன்படுத்தப்படுகிறது, இது கிறிஸ்து ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருசாராரையும் உள்ளடக்குகிறது.* [4]G. C. Brewer, *Brewer's Sermons: Christ Crucified* (Nashville: B. C. Goodpasture, 1952), 121. [5]*இந்தப் பத்தி,* William Barclay, *The Letter to the Hebrews* 3d ed., rev. and updated, The New Daily Study Bible (Louisville: Westminster John Knox Press, 2002), 35 *என்ற புத்தகத்தில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளது.*